O.S. No.29/2018

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 10.11.2025

D.W.3 - மாரீஸ்வரி க/பெ– கண்ணன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஆறுமுகம் எனது தகப்பனார். எனக்கு 2011ம் வருடம் திருமணம் நடந்தது. பிராது சொத்துக்கள் எனக்கு தெரியும். எனக்கு திருமணம் முடியும் வரை மேற்படி சொத்துக்களில் எனது பெற்றோர், உடன் பிறந்தவர்கள் மற்றும் நானும் விவசாயம் செய்து வந்தோம் பிராது சொத்துக்களில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானம் மற்றும் விளையும் பொருட்களை எனது தகப்பனார் நடமாடும் வரை 2019ம் வருடம் வரை பயன்படுத்தி வந்தேன். எனது தகப்பனார் 2019ம் வருடம் இறந்துவிட்டார். எனது தகப்பனார் சுமார் 6 மாதம் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். எனது தகப்பனார் உடல் நலம் சரியில்லாமல் இருந்த போது நானும், வாதி மற்றும் பிரதிவாதிகள் உடன் இருந்து பார்த்தோம்.

2) 3ம் பிரதிவாதி பொன்னுபாண்டி திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வேலை பார்த்து வருகிறார். 2ம் பிரதிவாதி பாண்டி ராம்கோ சிமிண்ட் பேக்டரியில் வேலை பார்க்கிறார்.எனது அண்ணன்கள் இருவரும் வெளியூரில் வேலை பார்த்ததால் பெண் மக்களாகிய நாங்கள் எனது பெற்றோருடன்சேர்ந்து விவசாயம் பார்த்து வந்தோம் என்றால் சரிதான். எனது சகோதரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் எனது தாயார் பெயரில் உள்ள சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகம் எதுவும் செய்யப்படாததால் எனது பாகத்தை பொறுத்து எதிர் கோரிக்கை கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.